**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.208/2021**

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 06.02.2023 | தந்தை பெயர்: | |
| பெயர்: | முத்துக்குமரன் (PW-1Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | புத்தூர் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 52/2023 |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை : 06.02.2023.</u>**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது சத்திய பிரமான வாக்மூலத்தை நிருபன வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் நிருபன வாக்குமூலத்தில் உள்ள அனைத்து விபரங்களும் எனக்கு தெரியும். எனது தரப்பு சாட்சியத்தை ஏற்று தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

29.07.2016 -ல் எனது வழக்கறிஞர் மூலம் 1-ம் பிரதிவாதி மற்றும் இதர நபர்களுக்கு கொடுத்த சட்ட அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன் (**அது வா.சா.ஆ.1)** ஆகும். மேற்படி வா.சா 1 க்கு எனக்கு 1-ம் பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்பின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன் **(அது வா.சா.ஆ.2 ஆகும்)** தாவா சொத்திற்கு நான் பிரதமந்திரி காட்பீட்டு திட்டத்தின் கீழ் பயிர் காப்பீடு செய்தற்கான இணையவழி முன்மொழி விண்ணப்பத்தை தாக்கல் செய்கிறேன் **(அது வா.சா.ஆ.3 ஆகும்)**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்கா ஒத்திவைக்கப்படுகிறது.